# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010

## HELD IN DECEMBER - 2010

## ECS 2.15 FUNDERMENTALS OF FINANCIAL ACCOUNTING

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**கல்குலேட்டர் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. அ. அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கொள்கைகள் என்பவற்றினை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ .பின்வரும் எண்ணக்கருக்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

1. அட்டுறு எண்ணக்கரு ( Accrual Concept)
2. வியாபார அலகு எண்ணக்கரு ( Business Entity Concept)
3. பொருண்மை எண்ணக்கரு ( Materiality Concept)
4. வரலாற்றுக்கிரய எண்ணக்கரு ( Historical Cost Concept)
5. பணஅளவீட்டு எண்ணக்கரு ( Money Measurement Concept)

(10 புள்ளிகள்)

இ. SLAS-05 இன் படி இருப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் அம்சங்களை விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. மகிமா நிறுவனத்தின் ஜனவரி மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு மூன்று நிரல் காசேட்டினைத் தயாரிக்குக.

ஜனவரி 01 கையிலிருந்த காசு ரூபா 15000, வங்கி மீதி ரூபா 5000 ஆகும்.

ஜனவரி 02 விற்பனை மூலம் பெறப்பட்ட காசு ரூபா 7000.

ஜனவரி 05 வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசு ரூபா 6000.

ஜனவரி 06 சுசனிடமிருந்து பெறப்பட்ட காசோலை ரூபா 700.

ஜனவரி 08 சுசனிடமிடருந்து பெறப்பட்ட காசோலை வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

ஜனவரி 10 அநுராவிற்கு செலுத்த வேண்டிய கடன் ரூபா 1200, ரூபா 1100 காசோலை மூலம் தீர்க்கப்பட்டது.

ஜனவரி 11 அலுவலக தேவைக்கு வங்கியிலிருந்து மீளப்பெறப்பட்ட காசு ரூபா 4000 ஆகும்.

ஜனவரி 12 காசு விற்பனை ரூபா 10,000.

ஜனவரி 14 மகேஸிடமிருந்து பெறப்பட்ட காசோலை ரூபா 10,000

ஜனவரி 15 ராமிற்கு தரகு ரூபா 500 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

ஜனவரி 16 மகேஸிடமிருந்து பெறப்பட்ட காசோலை மறுக்கப்பட்டது.

ஜனவரி 20 சொந்தத் தேவைக்காக ரூபா 800 ற்கு காசோலை வரையப்பட்டது.

ஜனவரி 22 சம்பளமாக காசு ரூபா 1500 வும், காசோலை ரூபா 500 வும் செலுத்தப்பட்டது.

ஜனவரி 23 ரூபனிடமிருந்து பெறவேண்டிய ரூபா 20000 இல் 5% வீத கழிவு நீக்கி பணம் பெறப்பட்டது.

ஜனவரி 30 வங்கிக் கட்டணம் ரூபா 40.

ஜனவரி 31 மின்சாரக்கட்டணம் ரூபா 1000 செலுத்தப்பட்டது.

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. நிகால் முயற்சியாண்மையின் ஏடுகளிலிருந்து 31.03.2010 ல் பிரித்தெடுக்கப்பட்டுள்ள மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதனம் | | 150000 |
| மோட்டார் வாகனம் | 45000 | |
| கட்டடம் | 115000 | |
| உள்வந்த வண்டி கூலி | 1800 | |
| வெளிச்சென்ற வண்டி கூலி | 1175 | |
| உட்திருப்பம் | 500 | |
| வெளித்திருப்பம் | | 425 |
| பெற்ற கழிவு | | 540 |
| கொடுத்த கழிவு | 480 | |
| கொள்வனவு | 58500 | |

| | | |
|---|---|---|
| விற்பனை | | 98000 |
| விளம்பரம் | 2650 | |
| தேய்வுக்கான ஏற்பாடு 01.04.2009 | | |
| கட்டடம் | | 12500 |
| மோட்டார் | | 7500 |
| அறவிடமுடியாக்கடன் | 265 | |
| அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் | | 875 |
| நானாவித வருமானம் | | 600 |
| இருப்பு 01.04.2009ல் | 12450 | |
| சம்பளம் | 5400 | |
| கூலி | 7865 | |
| பொதுச்செலவு | 2680 | |
| கடன்பட்டோர் | 3400 | |
| கடன் கொடுத்தோர் | | 2650 |
| பற்று | 2100 | |
| மின்சாரம் | 2250 | |
| வாடகை | 1070 | |
| பொதியிடல் செலவு | 1275 | |
| வங்கி மீதி | 8600 | |
| காசு மீதி | 630 | |
| | 273090 | 273090 |

செம்மையாக்கல்கள் பின்வருமாறு

1. 31.03.2010ல் இருப்பு ரூபா 13000 மாக மதிப்பிடப்பட்டுள்ளது.
2. 31.03.2010ல் பொதியிடல் செலவு ரூபா 500, வாடகை ரூபா 400, மின்சாரம் ரூபா 200 உம் அட்டுறு செலவுகளாகக் காணப்பட்டன.
3. 31.03.2010ல் முட்பணமாகச் செலுத்தப்பட்டவை. சம்பளம் ரூபா 600, விளம்பரம் ரூபா 400.
4. 25.03.2010ல் கொள்வனவு செய்திருந்த ரூபா 2000 சரக்கு 31.03.2010 வரை களஞ்சியத்திற்கு வரவில்லை.
5. அறவிடமுடியாக்கடனாக 100 ரூபாவைப் பதிவழிக்க. ஐயக் கடனுக்கு கடன்பட்டோரில் 5% ஏற்பாடு செய்ய தீர்மாணிக்கப்பட்டுள்ளது.

6. கட்டடங்கள் கொள்விலையில் 5% மும் மோட்டார் ஒடுங்குபாகு முறையில் 10% மும் தேய்விடப்படுகின்றன்

7. உரிமையாளரினால் பற்றிய ரூபா 400 பெறுமதியான சரக்குகள் பதிவு செய்யப்படவில்லை.

**நீர் வேண்டப்படுவது,**

1. நிகால் முயற்சியாண்மையின் 31.03.2010ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கினைத் தயாரிக்குக.
2. 31.03.2010ல் உள்ளவாரான ஐந்தொகையினைத் தயாரிக்குக.

(மொத்தம் 35 புள்ளிகள்)

04. ரிசட் கம்பனியின் 31.03.2010ல் பரீட்சை மீதியின் வரவுப் பக்கம் ரூபா 250 மிகையாகக் காணப்பட்டது. அவை தறகாலிகமாக தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டதோடு பின்வரும் தவறுகள் கண்டறியப்பட்டன.

I. சம்பளக் கணக்கின் வரவுப் பக்கக் கூட்டுத் தொகையானது ரூபா 50 மிகையாகக் கணப்பட்டது.

II. ரூபா 250 விற்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருளானது நாளேட்டிலிருந்து பேரேட்டற்கு மாற்றும் போது ரூபா 2500 எனப் பதியப்பட்டுள்ளது.

III. உட்திரும்பல் ரூபா 100 கணக்குகளிலிருந்து முற்றாக விடுபட்டுள்ளது.

IV. விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட காசோலை ரூபா 5000 கொள்வனவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டிருந்தன.

V. திரு அமலிடமிருந்து பெறப்பட்ட காசு ரூபா 1000 திரு பரத் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

VI. திரு பெரேராவிற்கு செலுத்தப்பட்ட ரூபா 500 அவரது கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:**

1. மேலே குறிப்பிடப்பட்ட வழுக்களுக்கான சரியான நாளேட்டுப்பதிவுகளைத் தருக.
2. தொங்கள் கணக்கினைத் தயாரிக்குக.

(மொத்தம் 10 புள்ளிகள்)

05. அ. வங்கிக்கணக்கிணக்கக் கூற்றை தயாரிப்பதன் பிரதான நோக்கம் என்ன?

(03 புள்ளிகள்)

ஆ. திரு கார்த்திக்கினுடைய 31.03.2010 முடிவடைந்த மாதத்திற்கான காசேட்டு வரவு மீதி ரூபா 850 ஆனது அதன் வங்கிக் கூற்று மீதியுடன் ஒப்பிடும் போது வேறுபட்டுக்காணப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கான காரணங்களை ஆராயும் போது பின்வரும் தகவல்கள் கண்டறியப்பட்டன.

i. ரூபா 600 இற்கு வரையப்பட்ட காசோலை 31.03.2010 வரையில் வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

ii. வங்கியினால் நேரடியாக வசூளிக்கப்பட்ட வருமதி உண்டியல் ரூபா 2000 தொடர்பாக காசேட்டில் எப்பதிவும் இடம் பெற்றிருக்கவில்லை.

iii. ரூபா 510 பெறுமதியான காசோலையை வங்கி ரூபா 501 ஆக செலவு வைத்திருந்தது.

iv. ரூபா 50 காசோலை வங்கியில் வைப்பிலிடப்பட்டது. ஆனால் அது வேறொருவர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

v. ரூபா 200 பெறுமதியான காசு வாடிக்கையாளரினால் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டது.

vi. நிறுவனத்தின் சார்பில் வங்கிக்கு நேரடியாகக் கிடைத்த தொகுதிக்கடன் வட்டி ரூபா 250.

vii. வங்கியினால் செலுத்தப்பட்ட சென்மதி உண்டியல் ரூபா 450.

viii. வங்கியினால் நிறுவனத்தின் கணக்கிறகு வரவு வைக்கப்பட்ட வங்கிக் கட்டணங்கள் ரூபா 100 ஆகும்.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

****************